வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

நாள்: 04.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

ஆன்மீகத்தின் மூலம், சமூகம், மற்றும், பூமித் தாயின் பல பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

உத்தரபிரதேஷ் மாநிலம் மீர்சாபூரில் இன்று, சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளார்.

ரயில்வே துறையில், எந்தவொரு சூழ்நிலையிலும் தனியார்மயம் இராது என்று, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், 5 நாள் **இந்திய திரைப்பட விழாவை**, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று மாலை தொடக்கி வைக்கிறார்.

-----------------------------

முர்மு 1 (17)

ஆன்மீகத்தின் மூலம், தனிநபரின் வாழ்க்கை பிரச்சனைகளுக்கு மட்டுமின்றி, சமூகம், மற்றும், பூமித் தாயின் பல பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். **தூய, ஆரோக்கியமான சமூகத்திற்கான ஆன்மீகம்** என்ற தலைப்பில், ராஜஸ்தான் மாநிலம் **அபு மலையில்** இன்று நடைபெற்ற **பிரஜாபிதா பிரம்ம குமாரிகள் சங்கத்தின்** உலக உச்சி மாநாட்டை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

உலகின் பல பகுதிகளில், அமைதியின்மை அதிகரித்து, மானுட மாண்புகள் குன்றி வரும் நிலையில், அமைதி, மற்றும், ஒத்துமையின் முக்கியத்துவம் இன்னும் அதிகரித்து இருப்பதாக, குடியரசுத் தலைவர்

குறிப்பிட்டார். தற்போது சுற்றுச் சூழல் மாசுபாடு, புவி வெப்பமயம் போன்ற பிரச்சனைகளால், உலகமே பாதிக்கப்பட்டு இருப்பதால், இப்பிரச்சனைகளை திறம்பட்ட முறையில் எதிர்கொள்ள, இயன்ற அனைத்து முயற்சிகளையும் எடுப்பது நம் கடமை என்று அவர் கூறினார். தாயின் பெயரில் ஒவ்வொருவரும் ஒரு மரம் நடுவதற்கான மத்திய அரசின் இயக்கத்தில், அனைவரும் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

முர்மு 2 (7)

தூய்மை குறித்து குடியரசுத் தலைவர் பேசுகையில், அனைத்து பாரம்பரியங்களிலும் தூய்மைக்கு முக்கிய இடம் வழங்கப் பட்டுள்ளதாக கூறினார். மனதை தூய்மையாக வைத்துக் கொள்ள, உணவில் தூய்மை அவசியம் என்பதையே நமது முன்னோர்கள் வலியுறுத்தி வந்துள்ளதாகவும், இயற்கை விவசாயத்தை அரசு ஊக்குவிப்பதால், மக்களுக்கு தூய உணவு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநாட்டின் தொடக்க விழாவில், ராஜஸ்தான் ஆளுநர் திரு. ஹரிபாவ் பாக்டே உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

-----------------------------

மோடி-விபத்து (16)

உத்தரபிரதேஷ் மாநிலம் மீர்சாபூரில் இன்று, சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கும், பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து, தலா 50 ஆயிரம் ரூபாய் உதவி அறிவிக்கப் பட்டுள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய, தாம் வேண்டுவதாகவும் சமூக ஊடகப் பதிவு ஒன்றில், பிரதமர் கூறியுள்ளார். மாநில அரசு சார்பில், பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவும் பணிகளில், உள்ளூர் நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேஷ் மாநிலம், மீர்சாபூர் மாவட்டத்தில் இன்று அதிகாலை, லாரி ஒன்று, ட்ராக்டர் ட்ராலி மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில், குறைந்தது 10 பேர் உயிரிழந்தனர். மேலும் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட அனைவரும்,

ட்ராக்டர் ட்ராலியில் பயணம் செய்த தொழிலாளர்கள் என்று, காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-----------------------------

*ராஜ்நாத்* (9)

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு உற்பத்தி, கடந்த 2023-24ஆம் ஆண்டில், 1 லட்சத்து 27 கோடி ரூபாய் மதிப்பை தாண்டி இருப்பதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய பாதுகாப்பு உற்பத்தியாளர் சங்கத்தின் வருடாந்திர பொதுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பாதுகாப்புத் துறையில், அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்க, அரசு பல்வேறு திட்டங்களை தொடக்கி இருப்பதாக கூறினார். தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி, அதிதி, iDEX உள்ளிட்ட ஊக்குவிப்புத் திட்டங்கள், மற்றும் முன் முயற்சிகளை பாதுகாப்பு அமைச்சகம் அமல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

-----------------------------

*அஷ்வினி வைஷ்ணவ்* (12)

ரயில்வே துறை எந்தவொரு சூழ்நிலையிலும் தனியார்மய மாக்கப்பட மாட்டாது என்று, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இன்று மஹாராஷ்ட்ர மாநிலம் நாசிக்கில், ரயில்வே பாதுகாப்புப் படையின் 40ஆவது நிறுவன நாள் விழாவில் அவர் கலந்து கொண்டு, அணிவகுப்பை பார்வையிட்டார். ஏழைகள், மற்றும், நடுத்தர மக்களின் முக்கியமான பயண வசதி ரயில்வே என்றும், இதை கருத்தில் கொண்டே, மத்திய அரசு, ரயில்வே துறையில் கணிசமாக முதலீடு செய்து இருப்பதாகவும், அமைச்சர் தமது உரையில் கூறினார். ரயில்வே துறையில், ஆராய்ச்சி, பாதுகாப்பு, மற்றும், மனிதவள ஆதாரங்களுக்கு முக்கிய கவனம் செலுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். ரயில்வே துறை தனியார்மயம் ஆக்கபடலாம் என்பது போல சில அரசியல் கட்சிகள் பேசி வருவது, வெறும் வதந்தி என்றும் அவர் குறிப்பிட்டார்.

-----------------------------

*அறிவியல் திருவிழா* (16)

2024ஆம் ஆண்டிற்கான, இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா, இவ்வாண்டு நவம்பர் 30 முதல், டிசம்பர் 3ஆம் தேதி வரை, அசாம் தலைநகர் குவஹாத்தியில் நடைபெற உள்ளது. அதிநவீன அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில், இந்தியாவின் சாதனைகளை கொண்டாடும் நோக்குடன், இந்திய அறிவியல்-தொழில் ஆராய்ச்சிக் கழகம், இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்து வருகிறது. **அறிவியல்-தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான உலக உற்பத்திக் கேந்திரமாக** இந்தியாவை மேம்படுத்துதல் என்னும் மையக் கருத்து அடிப்படையில், இவ்வாண்டு, *அறிவியல் திருவிழா* நடைபெறும் என்று, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி எப்போதுமே முக்கியத்துவம் அளித்து வருவதன் அடிப்படையில், இவ்வாண்டு இவ்விழாவிற்கு குவஹாத்தி நகரம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். நிகழ்ச்சியின் போது, இந்திய சர்வதேச அறிவியல் திருவிழாவிற்கான வீடியோ, மற்றும், கையேட்டையும் அமைச்சர் வெளியிட்டார்.

-----------------------------

*திரைப்பட விழா - புதுச்சேரி* (10)

புதுச்சேரியில், செய்தி விளம்பரத் துறையும், அலையான்ஸ் பிரான்ஸே மற்றும் நவதர்ஷன் திரைப்பட கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 5 நாள் **இந்திய திரைப்பட விழாவை**, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று மாலை தொடக்கி வைக்கிறார். 2022ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படத்திற்கான சங்கரதாஸ் சுவாமிகள் விருதை, குரங்கு பெடல் திரைப்பட இயக்குநர் **கமலக் கண்ணனுக்கு** அவர் வழங்கி சிறப்பிக்கிறார். அலையான்ஸ் பிரான்ஸே கலையரங்கில் நடைபெறும் இவ்விழாவில், இன்றைய தினம் குரங்கு பெடல் திரைப்படமும், விழாவின் எஞ்சிய நாட்களில், தலா ஒரு பிராந்திய மொழித் திரைப்படமும், மாலை 6 மணிக்கு, இலவசமாக திரையிடப்படும்.

-----------------------------

*நியமனக் கடிதம்* (9)

புதுச்சேரி அரசின் பள்ளிக் கல்வித் துறை மூலம், விரிவுரையாளர் பதவிக்கான நேரடி நியமனத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 42 பேருக்கு,

முதலமைச்சர் திரு.ரங்கசாமி இன்று, பணி ஆணைகளை வழங்கினார். சட்டப் பேரவையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர்.செல்வம், மாநில கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம், பள்ளிக் கல்வித் துறைச் செயலர் திரு. ஜவகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விரிவுரையாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 42 பேரில், புதுச்சேரியில் 28 பேருக்கும், காரைக்காலில் 3, மாகேயில் 9, மற்றும், ஏனாமில் இருவருக்கும், நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

-----------------------------

புதுச்சேரி-உள்விளையாட்டு (11)

புதுச்சேரியில், லாஸ்பேட் பகுதியில் உள்ள பல்நோக்கு விளையாட்டு அரங்கில், ஏற்கனவே இருந்த மொசைக் தரைக்கு பதிலாக, 1 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில், மாநில அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலத்துறை இயக்குநரகத்தால் அமைக்கப் பட்டுள்ள, **மரத்தினால் ஆன** தரைப் பரப்பை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று திறந்து வைத்தார். தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசுகள், மற்றும், கோப்பைகளையும் அவர் வழங்கினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கல்யாண சுந்தரம், துறைச் செயலர் திரு. தல்வாடே, துறை இயக்குநர் திருமதி பிரியதர்ஷினி உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

-----------------------------

தமிழ் வளர்ச்சி (11)

புதுச்சேரி அரசின் கலை பண்பாட்டுத் துறை, மற்றும், தமிழ் வளர்ச்சி சிறகம் சார்பில், மாநில கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பிஆர்என் திருமுருகன் தலைமையில், **தமிழ் வளர்ச்சியை முன்னிறுத்துவோர் பேராசிரியர்களா, எழுத்தாளர்களா** என்ற தலைப்பில், காரைக்காலில் நடைபெற்ற, விவாத மேடை நிகழ்ச்சியில், தமிழ் சான்றோர்கள், மற்றும், 7 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ-மாணவியர் கலந்து கொண்டனர். வழக்கமாக புதுச்சேரியில் நடத்தப்படும் இத்தகைய நிகழ்ச்சி, முதல் முறையாக காரைக்காலில் நடத்தப் படுவதாகவும். இதற்கென, முதலமைச்சருக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும்

அமைச்சர் தமது உரையில் கூறினார். விழாவில் பங்கேற்ற தமிழ் அறிஞர்களை, அவர் சால்வை அணிவித்து கவுரவித்தார்.

-----------------------------

திருப்பதி லட்டு (17)

திருப்பதி லட்டு பிரசாதத்தின் தயாரிப்பில், கலப்பட நெய் பயன்படுத்தப் பட்டதாக கூறப்படும் குற்றச் சாட்டுகளை விசாரிக்க, உச்சநீதிமன்றம், சுதந்திரமான சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்றை அமைக்க உத்தரவிட்டுள்ளது. 2 சிபிஐ அதிகாரிகள், மற்றும், ஆந்திர காவல் துறையைச் சேர்ந்த 2 அதிகாரிகளும், இந்திய உணவுத் தரப் பாதுகாப்பு ஆணையத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவரும் இந்த சிறப்புப் புலனாய்வுக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். புலனாய்வுப் பணிகள், சிபிஐ இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும். மூத்த பிஜேபி தலைவர் டாக்டர் சுப்ரமணியன் சுவாமி, நாடாளுமன்ற உறுப்பினரும், திருமலா திருப்பதி தேவஸ்தான வாரியத்தின் முன்னாள் தலைவருமான திரு. சுப்பா ரெட்டி, வரலாற்று அறிஞர் திரு. விக்ரம் சம்பத், ஆன்மீக சொற்பொழிவாளர் திரு. துஷ்யந்த் ஸ்ரீதர் உட்பட, பலரால் தாக்கல் செய்யப் பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணையின் போது, நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது. திருப்பதி பெருமாளின் கோடிக் கணக்கிலான பக்தர்கள் உணர்வுக்கு மதிப்பு அளித்தே, இந்த உத்தரவு வெளியிடப் படுவதாகவும், இப்பிரச்சனையில் நீதிமன்றத்தின் முடிவை அரசியல் போர் களமாக பயன்படுத்தக் கூடாது என்றும், உச்சநீதிமன்றம் கூறியது.

-----------------------------

வானிலை (13)

மத்திய மேற்கு, மற்றும் அதை ஒட்டிய தெற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சிநிலவுவதால் இன்று, தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. நாளைய தினம், தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர், மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட

மாவட்டங்களில், காரைக்கால் பகுதியின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும் என்றும், வரும் 10ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*புதிய மின்சாரம் (17)*

இந்தியாவில், புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறை மூலமான வேலை வாய்ப்புகளின் மொத்த எண்ணிக்கை, கடந்த ஆண்டில், 10 லட்சத்தை தாண்டி அதிகரித்து இருப்பதாக, புதிய, மற்றும், புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சர்வதேச புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஏஜென்சியின் ஆண்டறிக்கையை மேற்கோள் காட்டி, இன்று அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், உலக அளவில் இத்துறையின் வேலை வாய்ப்புகள், 1 கோடியே 62 லட்சமாக அதிகரித்து இருப்பதாகவும், இதில், இந்தியாவின் பங்கு குறிப்பிடத்தக்கது என்றும், தெரிவித்துள்ளது. புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறை மூலமான இந்தியாவின் மொத்த வேலை வாய்ப்புகளில், 4 லட்சத்து 53 ஆயிரம் வேலை வாய்ப்புகள், நீர் மின்சாரத் துறை மூலமாக கிடைப்பதாகவும், சூரிய விசை, காற்று விசை உள்ளிட்ட துறைகள், கணிசமான அளவில் வேலை வாய்ப்புகளை வழங்குவதாகவும், தெரிவிக்கப் பட்டுள்ளது. முக்கியமான இந்த மைல் கல் எட்டப் பட்டதற்கு, தேசிய ஹைட்ரஜன் இயக்கம், பிரதமரின் சூர்ய வீடு திட்டம், மற்றும், சோலார் மின் உற்பத்திக் கருவிகளின் உற்பத்தியாளர்களுக்கான, உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்புத் திட்டம் உள்ளிட்ட அரசின் முக்கிய முன் முயற்சிகளே காரணம் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஆன்மீகத்தின் மூலம், சமூகம், மற்றும், பூமித் தாயின் பல பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

உத்தரபிரதேஷ் மாநிலம் மீர்சாபூரில் இன்று, சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளார்.

ரயில்வே துறையில், எந்தவொரு சூழ்நிலையிலும் தனியார்மயம் இராது என்று, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், 5 நாள் இந்திய திரைப்பட விழாவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று மாலை தொடக்கி வைக்கிறார்.